DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.178/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் கீழ்க்குடியில் வசித்து வருகிறேன். 07.11.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் கண்மாய்க்கரை பிள்ளையார்கோவில் அருகில் ஆஜர் 2 ம் எதிரி மாதவனும் 1ம் எதிரி ஏழுமலையும் ஒரு காளைமாட்டை கயிற்றில் கட்டிபோட்டு கொண்டிருந்தார்கள். மேற்படி மாடு தாழையூர் கூத்தாடி முத்து பெரியநாயகி அம்மன் கோவில் மாடு ஆகும். நான் எதுக்கு மாட்டை பிடித்து கட்டிப்போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு வெளியூருக்கு ஏற்றி கொண்டு போவதற்காக என்று சொன்னார்கள். பின்னர் நான் ஆறாவயல் போலீசாருக்கு தகவல் தெரிவித்தேன். எங்கள் ஊரைச்சேர்ந்த

காளைராஜன், பாண்டியன், பக்கத்து ஊரைச் சேர்ந்த செல்வராஜ் ஆகியோர்களுக்கு நான் தகவல் தெரிவித்தேன். பின்பு மாட்டை எதிரிகளிடம் அவிழ்த்துவிட சொல்லி அவிழ்த்துவிட்டோம். பின்பு எதிரிகள் வைத்திருந்த super xl, TVS sport வண்டிகளையும் எடுத்துக்கொண்டு எதிரிகளுடன் காவல் நிலையத்திற்கு சென்றோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

**S/d.Manikandan**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.178/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | காளைராஜன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மகாலிங்கம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் கீழ்க்குடியில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 07.11.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் தாழையூர் முத்துப்பெரியநாயகி அம்மன் கோவில் மாட்டை பிள்ளையார்கோவில் அருகில் ஆஜர் 2ம் எதிரியும், மற்றொரு பையனும் பிடித்து கயிறு போட்டு கட்டிவைத்திருந்தார்கள். பின்பு அ.சா.1 போலீசாருக்கு தகவல் சொல்லி ஆறாவயல் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்துவிட்டார்கள். போலீசார் அங்கு மாடு பிடித்தது பற்றி விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

S/d.Kaalairajan

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.